டிஜிட்டல் டெய்லி
Kaalaimani.com
காலைமணி.காம்
10.8.2023 வியாழக்கிழமை • மதுரை • பக்கங்கள் 25 • Online Edition • www.kaalaimani.com

# புதுப்பிக்கப்பட்ட அரசு பேருந்துகள் ஆக.11ல் முதல்வர் தொடங்கி வைக்கிறார்

சென்னை, ஆக.9

புதுப்பிக்கப்பட்ட அரசுப் பேருந்துகளை ஆக.11-ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கஉள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து போக்குவரத்துக் கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளதாவது:

கடந்த ஆட்சியில் பச்சை நிறத்தில் பேருந்துகள் இயக்கப்பட்ட நிலையில், பிஎஸ் 4 ரக பேருந்து வருகையால் பேருந்துகள் நீல நிறத்துக்கு மாற்றப்பட்டன.

அதன்படி, தமிழகத்தில் தற்போது புறநகர் செல்லும் புதிய பேருந்துகள் நீல நிறத்திலும், நகர, மாநகர பேருந்துகள் பெரும்பாலும் சிவப்பு நிறத்திலேயே இயக்கப்படுகின்றன.

இதிலும் பெண்களுக்கு கட்டணமில்லா சேவை வழங்கும் பேருந்துகளை அடையாளம் காணும் வகையில் முன், பின் பக்கங்களில் பிங்க் நிறம் அடிக்கப்பட்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்நிலையில், தமிழகம் முழுவதும் பயன்படுத்த 1,000 புதிய பேருந்துகளை வாங்கவும், 500 பழைய பேருந்துகளை புதுப்பிக்கவும் ரூ.500 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது.

அதன்படி, அடிச்சட்டம் நல்ல நிலையில் உள்ள பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுக்கு மஞ்சள் நிறம் அடிக்கப்பட்டு வருகிறது. நிறம் மட்டுமின்றி, பேருந்துகளின் இருக்கை, அமரும் வசதி போன்றவை விரிவாக இருக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 100பேருந்துகளை வரும் 11ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# 5 ஆண்டுகளில் வாடிக்கையாளர்களிடம் ரூ.38 ஆயிரம் கோடி வசூலித்த வங்கிகள்

## மத்திய அமைச்சர் தகவல்

புது தில்லி, ஆக.9

கடந்த 5 ஆண்டுகளில் வங்கிக்கணக்கில் குறைந்தபட்ச இருப்பு தொகையை வைத்திருக்காததற்கு அபராதம், கூடுதல் ஏடிஎம் பரிவர்த்தனை கட்டணம் உள்ளிட்டவற்றிற்கு வாடிக்கையாளர்களிடம் இருந்து ரூ.38 ஆயிரம் கோடியை வங்கிகள் வசூலித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் கேட்கப்பட்ட கேள்விக்கு, மத்திய நிதித்துறை இணையமைச்சர் பகவத் காரத் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:– 2018ம் ஆண்டு முதல் தற்போது வரை, கடந்த 5 ஆண்டுகளில் பொதுத்துறை வங்கிகள் மற்றும் ஆக்ஸிஸ் வங்கி, ஹெச்டிஎப்சி வங்கி, ஐசிஐசிஐ வங்கி, இந்தஸ்இண்ட் வங்கி உள்ளிட்ட தனியார் வங்கிகள், வங்கிக்கணக்கில் குறைந்தபட்ச இருப்பு தொகையை வைத்திருக்காததற்கு வாடிக்கையாளரிடம் இருந்து அபராதமாக ரூ.21,044 கோடியும், கூடுதல் ஏ.டி.எம் பரிவர்த்தனைகளுக்கு ரூ.8,289.3 கோடியும், எஸ்.எம்.எஸ் சேவைகளுக்கு ரூ.6,254.3 கோடி கட்டணமாக வங்கிகள் வசூலித்துள்ளன.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏப்.,1, 2015 முதல் வங்கிகள் குறைந்தபட்ச இருப்பு தொகையை பின்பற்றாத சேமிப்பு கணக்குகளுக்கு அபராதம் விதிக்க ரிசர்வ் வங்கி அனுமதி அளித்தது. அனைத்து வகையான பரிவர்த்தனைகளுக்கும் ஆன்லைனில் அலெர்ட் வசதியை வங்கிகள் ஏற்படுத்த வேண்டும். நியாயமான தன்மையை உறுதி செய்வதற்காக, அத்தகைய கட்டணங்களை வாடிக்கையாளர்களிடம் வசூலிப்பதை உறுதி செய்யுமாறு வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி அறிவுறுத்தி இருந்தது. ஏடிஎம் பரிவர்த்தனையை பொறுத்தவரை, வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு மாதத்தில் குறைந்தது 5 முறை ஏடிஎம்களில் பரிவர்த்தனைகளை இலவசமாக மேற்கொள்ளலாம். மற்ற வங்கி ஏடிஎம்கள் எனில், மெட்ரோ நகரங்களில் 3 முறையும், மெட்ரோ அல்லாத நகரங்களில் 5 முறையும் பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் இல்லை. கூடுதல் பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் விதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

kaalaimani.com in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Phone: 4366425.

# 2023-24ம் நிதியாண்டில் பொதுத்துறை நிலக்கரி பழுப்பு நிலக்கரி நிறுவனங்களின் பசுமை நடவடிக்கைகள்

புது தில்லி, ஆக.9

நிலக்கரி அமைச்சகத்தின் கீழ் உள்ள நிலக்கரி, பழுப்பு நிலக்கரி பொதுத்துறை நிறுவனங்கள் நாட்டின் அதிகரித்து வரும் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதற்காக பல ஆண்டுகளாக தங்கள் உற்பத்தி அளவை அதிகரித்து வருகின்றன. அத்துடன், சுரங்கம் தோண்டப்பட்ட பகுதிகளை மேம்படுத்துவது மற்றும் நிலக்கரி வயல்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் தோட்டம் அமைத்தல் போன்ற பல்வேறு பசுமை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இதன் மூலம் உள்ளூர் சுற்றுச்சூழலில் அந்த நிறுவனங்கள் அக்கறை காட்டுகின்றன.

நிலக்கரி அமைச்சகத்தின் கீழ், நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி பொதுத்துறை நிறுவனங்கள் 2023-24 நிதியாண்டில் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நடவுள்ளன. இந்த மரக்கன்றுகள் 2400 ஹெக்டேர் பரப்பளவில் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி பொதுத்துறை நிறுவனங்கள், 2023 ஆகஸ்ட் நிலவரப்படி 1117 ஹெக்டேர் நிலப்பரப்பில் 19.5 லட்சத்திற்கும் அதிகமான உள்நாட்டு மர இனங்களை நடவு செய்துள்ளன. நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி பொதுத் துறை நிறுவனங்கள் 2030 ஆம் ஆண்டிற்குள் நிலக்கரி வயல்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள சுமார் 30,000 ஹெக்டேர் பரப்பளவை தோட்டக்கலை நடவடிக்கைகள் மூலம் பசுமையாக்கத் திட்டமிட்டுள்ளன.

நிலக்கரி, பழுப்பு நிலக்கரி பொதுத்துறை நிறுவனங்களால் மியா வாகி எனப்படும் அடர் காடுகள் நடவு முறை போன்ற புதுமையான தோட்டத் தொழில் நுட்பங்கள் பின்பற்றப்பட்டுள்ளன. ஜப்பானிய தோட்டக்கலை நுட்பமான மியாவாகி முறை, மோசமான அல்லது வறண்ட நிலத்தில் அடர்த்தியான காடுகளை விரைவாக உருவாக்க மிகவும் பயனுள்ள முறைகளில் ஒன்றாகும். நிலக்கரி சுரங்கம் மற்றும் பிற நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நிலங்கள் உட்பட சேதமடைந்த நிலங்களை மீட்டெடுப்பதற்கான ஒரு முக்கிய முறையாக காடு வளர்ப்பு உள்ளது. இது மண் அரிப்பைத் தடுக்கவும், சிறந்த பருவநிலையை உறுதிப்படுத்தவும், வனவிலங்குகளைப் பாதுகாக்கவும், காற்று மற்றும் நீரின் தரத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

காலைமணி.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# உலகளாவிய சிக்கல்களைத் தீர்ப்பதில் இந்தியா முன்னிலை வகிக்கிறது: ஜிதேந்திர சிங்



புது தில்லி, ஆக.9

பிரதமர் நரேந்திர மோடி உலகளாவிய பருவநிலை இயக்கத்தை வழிநடத்துவதாகவும் பருவநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவின் வழிநடத்தலை ஏற்க உலகம் தயாராக உள்ளது எனவும் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில், தொழில் வர்த்தக சங்க பிரதிநிதிகளுடன் இன்று கலந்துரையாடிய அவர், பி.ஹெச்.டி சேம்பர் என்ற இந்த தொழில் வர்த்தக கூட்டமைப்பின் நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவித்தார். பசுமை ஹைட்ரஜன் மையத்தை இந்த கூட்டமைப்பு அமைத்துள்ளதற்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார். பசுமை எரிசக்தி மாற்றத்தில் கவனம் செலுத்தும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறைக்கு உதவ மத்திய அரசு விரும்புகிறது என்று அவர் கூறினார்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், இந்தியா உலகின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி விரிவாக்கத் திட் டத்தை செயல்படுத்தி வருவதாக ஜிதேந்திர சிங் கூறினார். 2030 ஆம் ஆண்டிற்குள் புதைபடிவமற்ற எரிபொருள் வளங்களிலிருந்து 500 ஜிகாவாட் நிறுவப்பட்ட மின் திறனை அடைய இந்தியா உறுதிபூண்டுள்ளது என்று அவர் கூறினார்.

பருவநிலை மாற்றத்திற்கு எதிரான இந்தியா சிறந்த அறப்போரை கடந்த ஒன்பது ஆண்டுகளில் நிகழ்த்தியுள்ளதாக அவர் கூறினார்.

2030 பாரிஸ் ஒப்பந்த இலக்கை விட அதிகமாக, புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து 40 சதவீத எரிசக்தி உற்பத்தி செய்வது இந்தியா இலக்கை மிஞ்சியுள்ளதாக ஜிதேந்திர சிங் தெரிவித்தார். மின் இன்னோவேஷன் மூலம், ஊக்கமளிக்கும் கண்டுபிடிப்பு இலக்குகளை ஊக்குவிப்பதற்கான கூட்டு முயற்சிகளில் இந்தியா தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்று ஜிதேந்திர சிங் வலியுறுத்தினார்.

மேக் இன் இந்தியா, டிஜிட்டல் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா, பசுமை இந்தியா மற்றும் ஸ்மார்ட் சிட்டிகள் போன்ற தேசிய இயக்க முன்முயற்சிகள் நாடு முழுவதும் தூய்மை யான எரிசக்தி கண்டுபிடிப்புகளின் மையங்களை ஊக்குவித் துள்ளன. மேலும், ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கிற்கு குறைந்த கார்பன் மாற்றுகளை ஒருங்கிணைந்த முறையில் உருவாக்க இந்தியா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற் சியை மேற்கொண்டுள்ளது என்று அமைச்சர் மேலும் கூறினார்.

அடுத்த 25 ஆண்டுகளுக்கான இந்தியாவின் செயல்திட்டம், வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளால் தீர்மானிக்கப்படும் என்று அவர் கூறினார்.

பிரதமர் மோடியின் முயற்சியால், ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச யோகா தினத்தை கொண்டாடுவதாகவும், இந்த ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக கொண்டாடப் படுவதாகவும் ஜிதேந்திர சிங் கூறினார். ஆயுஷ்மான் பாரத் – பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டம், 50 கோடிக்கும் அதிகமான பயனாளிகளை இலக்காகக் கொண்ட உலகின் மிகப்பெரிய அரசு நிதியுதவி சுகாதார திட்டமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் கடந்த ஒன்பது ஆண்டுகளில் சுமார் 59 சதவீதம் அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார். இந்த விரிவாக்கத்தின் விளைவாக, இந்தியா இப்போது அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய சாலைக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். உலகின் மிகப்பெரிய குடிநீர் திட்டம் ஜல் ஜீவன் திட்டம் என்று ஜிதேந்திர சிங் கூறினார்.

# கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவின் 7 முக்கிய நகரங்களில் சொகுசு வீடுகளின் விலை 24 சதம் அதிகரிப்பு: அனரோக்

புது தில்லி, ஆக.9

கடந்த 5 ஆண்டுகளில் இந்தியாவின் 7 முக்கிய நகரங்களில் சொகுசு வீடுகளின் விலை 24 சதம் அதிகரித்துள்ளது என அனரோக் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.



இது குறித்து அனரோக் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாவது:

ரூ.1.5 கோடிக்கு மேல் விலை கொண்ட சொகுசு வீடுகளின் சராசரி விலை கடந்த 5 ஆண்டுகளில் சென்னை, தில்லி-என்சிஆர், மும்பை, கொல்கத்தா, புனே, ஹைதராபாத், பெங்களூரு ஆகிய முக்கிய நகரங்களில் 24 சதம் அதிகரித்துள்ளது. அதே நேரம், கடந்த 5 ஆண்டுகளில் ரூ.40 லட்சத்துக்கும் குறைவான விலை கொண்ட மலிவு விலைப் பிரிவு வீடுகளின் சராசரி விலை அந்த நகரங்களில் 15 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது. நடுத்தர மற்றும் பிரீமியம் பிரிவைச் சேர்ந்த வீடுகளின் (ரூ.40 லட்சம் முதல் ரூ.1.5 கோடி வரை விலை கொண்டவை) சராசரி விலை கடந்த ஐந்து ஆண்டுகளில் 18 சதம் அதிகரித்துள்ளது. கடந்த 2018ம் ஆண்டில் குறிப்பிட்ட ஏழு நகரங்களில் சொகுசு வீடுகளின் சராசரி விலை சதுர அடிக்கு ரூ.12,400-ஆக இருந்தது. தற்போது அது சதுர அடிக்கு ரூ.15,350-ஆக அதிகரித்துள்ளது.

மேலும், அந்த நகரங்களில் மலிவு விலை வீடுகளின் சராசரி விலை கடந்த 2018ம் ஆண்டில் ஒரு சதுர அடிக்கு ரூ.3,750-ஆக இருந்தது. அது தற்போது ரூ.4,310-ஆக அதிகரித்துள்ளது. அதே போல், கடந்த 2018-ஆம் ஆண்டு அந்த நகரங்களில் ஒரு சதுர அடிக்கு ரூ.6,050-ஆக இருந்த நடுத்தர மற்றும் பிரீமியம் பிரிவு வீடுகளின் சராசரி விலை, தற்போது சதுர அடிக்கு ரூ.7,120 என உயர்ந்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சொகுசு வீடுகளைக் கட்ட உயர்தர கட்டுமானப் பொருள்கள் பயன்படுத்தப்படுவது அதிகரித்து வருகிறது. மேலும், அந்த வகை வீடுகள் அதிக வசதி கொண்டவையாக வடிவமைக்கப்படுகின்றன. இதன் காரணமாகவே அந்தப் பிரிவு வீடுகள் அதிக விலை உயர்வைக் கண்டுள்ளது என்று அந்த புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# டெஸ்லாவின் உயர் பொறுப்புக்கு இந்திய வம்சாவளி வைபவ் நியமனம்

புது தில்லி, ஆக.9

அமெரிக்காவைச் சேர்ந்த, மின்சார கார் தயாரிப்பு நிறுவனமான, டெஸ்லா நிறுவனம், இந்திய வம்சாவளியான வைபவ் தனேஜாவை, புதிய தலைமை நிதி அதிகாரியாக நியமித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: தலைமை நிதி அதிகாரியாக பொறுப்பு வகித்து வந்த சச்சரி கிர்கோர்ன் தன் ராஜினாமாவை அறிவித்ததை தொடர்ந்து, தலைமை கணக்கியல் அதிகாரியாக பணியாற்றி வந்த வைபவ் தனேஜாவுக்கு இந்த கூடுதல் பொறுப்பை நிறுவனம் வழங்கியுள்ளது. சச்சரி கிர்கோர்ன், நிறுவனத்தின் நலன் கருதி, நடப்பாண்டு இறுதி வரை நிறுவனத்தில் தொடர்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அவரது பதவி விலகலுக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. இந்தியாவில் டெஸ்லா நிறுவனம் தொழில் துவங்குவது குறித்து அண்மைக் காலமாக பரபரப்பாக பேசப்பட்டு வரும் நிலையில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒருவருக்கு முக்கியப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது, இந்தியர்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது.



# தமிழகத்தில் புதிய தொழிற்சாலை அமைக்கிறது

## கோத்ரெஜ் கன்ஸ்யூமர் நிறுவனம்

புது தில்லி, ஆக.9

ரூ.900 கோடி முதலீட்டில் கோத்ரெஜ் கன்ஸ்யூமர் நிறுவனம், தமிழகம் மற்றும் மத்திய பிரதேசத்தில் புதிய தொழிற்சாலைகளை அமைக்க முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. சமீபத்தில், நடைபெற்ற இந்நிறுவனத்தின் நிர்வாக குழு கூட்டத்தில், இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது குறித்து விரிவான செய்தியாவது: நுகர்வோர் பொருட்கள் தயாரிப்பு நிறுவனமான கோத்ரேஜ் கன்ஸ்யூமர் புராடக்ட்ஸ் நிறுவனம், ரூ.900 கோடி ரூபாய் முதலீட்டில், தமிழகம் மற்றும் மத்திய பிரதேசத்தில் புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு, அதன் நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த கூடுதல் முதலீட்டின் வாயிலாக, வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் தனிநபர் ஆரோக்கிய பராமரிப்பு பொருட்கள் வகைகளில், கிட்டத்தட்ட 20 சத உற்பத்தி திறனை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, கோத்ரெஜ் நிறுவனத்தின் திறன் பயன்பாடு 75-80 சதவீதமாக உள்ளது.

இந்த முதலீடுகள், அதிகரித்து வரும் வாடிக்கை யாளர்கள் தேவையை பூர்த்தி செய்வதற்கும், உற்பத்தி தளங்களை ஒருங்கிணைக்கவும் மேற்கொள்ளப்படுவதாக கோத்ரெஜ் தெரிவித்துள்ளது. இந்தத் திட்டமானது, நிறுவனத்தின் வருவாய் மற்றும் கடன் ஆகியவற்றின் வாயிலாக செயல்படுத்தப்படும். மேலும், புதிய உற்பத்தித் தளங்கள் 18-36 மாதங்களில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கோத்ரெஜ் நிறுவனம் தெரிவித்துள்ளது.



# கனிமங்களின் விநியோகத்தை அதிகரிக்கவும், கோக்கிங் நிலக்கரி கிடைப்பதை உறுதி செய்யவும் அரசு எடுத்த நடவடிக்கைகள்



புது தில்லி, ஆக.9

கனிமங்களின் விநியோகத்தை அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது, இதில் மேம்பட்ட உற்பத்தியை உறுதி செய்வதற்காக சுரங்கம் மற்றும் கனிமக் கொள்கை சீர்திருத்தங்கள், காலாவதியான குத்தகைகளுடன் சுரங்கங்களை விரைவாக ஏலம் விடுதல் மற்றும் செயல்படுத்துதல், வணிகம் செய்வதை எளிதாக்குதல், அனைத்து செல்லுபடியாகும் உரிமைகள் மற்றும் ஒப்புதல்களை தடையின்றி மாற்றுதல், சுரங்க செயல்பாடு மற்றும் அனுப்புதல், சுரங்க குத்தகைகளை மாற்றுதல், உற்பத்தி செய்யப்படும் கனிமங்களில் 50% வரை விற்பனை செய்ய தனியார் சுரங்கங்களை அனுமதித்தல், ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

தேசிய எஃகு கொள்கை 2017ல் கணிக்கப்பட்டுள்ள உள்நாட்டு கோக்கிங் நிலக்கரி தேவையை பூர்த்தி செய்ய நிலக்கரி அமைச்சகம் மின் கோக்கிங் நிலக்கரியை 2022ம் நிதியாண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. கோக்கிங் நிலக்கரி இறக்குமதியைக் குறைக்க, எஃகுத் துறையால் கோக்கிங் நிலக்கரி கலப்பு தற்போது 10-12% லிருந்து 30-35% ஆக உயர்த்தப்படும். பிரதமரின் தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் நிலக்கரி அமைச்சகம் எடுத்துள்ள மாற்ற நடவடிக்கைகளால், உள்நாட்டு கச்சா கோக்கிங் நிலக்கரி உற்பத்தி 2030 ஆம் ஆண்டில் 140 மெட்ரிக் டன்னை எட்டும், இது சுமார் 48 மெட்ரிக் டன் பயன்படுத்தக்கூடிய கோக்கிங் நிலக்கரியை கழுவிய பின்னர் கிடைக்கும்.

மேலும், உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது, உயிரி எரிபொருள்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திகளைப் பின்பற்றுவது, எரிசக்தி செயல்திறனை அதிகரிப்பது, சுத்திகரிப்பு செயல்முறைகளில் முன்னேற்றம் மற்றும் தேவை மாற்றீடு உள்ளிட்ட ஐந்து உத்திகளை பின்பற்றுவதன் மூலம் எல்.என்.ஜி உள்ளிட்ட ஹைட்ரோகார்பன்களின் இறக்குமதி சார்புநிலையைக் குறைப்பதற்கான செயல் திட்டத்தை அரசு தயாரித்துள்ளது.

உள்நாட்டு எஃகு தொழில்துறையின் தற்போதைய தேவை / நுகர்வை பூர்த்தி செய்ய நாட்டில் இரும்பு தாது மற்றும் கோக்கிங் அல்லாத நிலக்கரி போதுமான இருப்பு உள்ளது.

இருப்பினும், ஒருங்கிணைந்த எஃகு உற்பத்தியாளர்களால் முதன்மையாகப் பயன்படுத்தப்படும் தேவையுடன் ஒப்பிடும்போது நாட்டில் உயர்தர நிலக்கரி / கோக்கிங் நிலக்கரி (குறைந்த சாம்பல் நிலக்கரி) விநியோகம் குறைவாக இருப்பதால் கோக்கிங் நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகிறது. இத்தகவலை மத்திய உருக்கு துறை இணையமைச்சர் ஃபகன் சிங் குலஸ்தே மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

# துறைமுகங்களுக்கான ரயில், சாலைப் போக்குவரத்து இணைப்பு: மத்திய அமைச்சர் விளக்கம்

புது தில்லி, ஆக.9

நாட்டின் அனைத்து முக்கிய துறைமுகங்களும் ரயில் மற்றும் நான்கு வழிச் சாலை அல்லது தேசிய நெடுஞ்சாலை மூலம் இணைக்கப்பட்டுள்ளன.



மாநில அரசுகளிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, சரக்குகளைக் கையாளும் பெரிய துறைமுகங்கள் மற்றும் பிற 66 துறை முகங்களில், 13 துறை முகங்கள் ரயில் மூலமாக வும், 24 துறைமுகங்கள் 4 வழிச் சாலை அல்லது தேசிய நெடுஞ்சாலை மூலமாகவும் இணைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 2 துறைமுகங்கள் நிலக்கரியையும், 2 துறை முகங்கள் சிமெண்ட்டையும், ஒரு துறைமுகம் உரங்களையும், 7 துறைமுகங்கள் பெட்ரோலியம் மற்றும் பெட்ரோகெமிக்கல் பொருட்களையும் கையாளுகின்றன. 2022-23 ஆம் ஆண்டில் இந்திய துறைமுகங்களில் கையாளப்பட்ட மொத்த சரக்குகளில், குஜராத் மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள துறைமுகங்கள் முறையே 493.85 மில்லியன் டன் மற்றும் 133.32 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டுள்ளன. இத்தகவலை மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

# ராணுவ ட்ரோன்களில் சீன பாகங்களை பயன்படுத்த மத்திய அரசு தடை

புது தில்லி, ஆக.9

உள்நாட்டில் தயாரிக்கப்படும் ராணுவ ட்ரோன்களில் சீன உதிரி பாகங்களைப் பயன்படுத்துவதற்கு மத்திய அரசு தடை விதித்துள்ள தாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இது குறித்து ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், சீனாவில் தயாரிக்கப்பட்ட உதிரி பாகங்களில் பாதுகாப்பு குறைபாடுகள் உள்ளதால், அவற்றை ராணுவ ட்ரோன்களின் உற்பத்தியில் பயன்படுத்துவதற்கு அண்மைக்காலமாக மத்திய அரசு தடை விதித்துள்ளது.

கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில் இந்தியா–சீனா ராணுவத்தினர் இடையே மோதல்போக்கு நீடித்து வரும் சூழலில் இந்த முடிவை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சீனாவில் தயா ரிக்கப்பட்ட உதிரி பாகங்களைத் தொடர்ந்து பயன்படுத்தினால், உள வுத் தகவல்களைச் சேகரிப்பதில் பின்னடைவு ஏற்படலாம் என அதி காரிகள் எச்சரித்ததைத் தொடர்ந்து இந்த முடிவை மத்திய அரசு எடுத் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த 2020ம் ஆண்டில் இருந்து கண்காணிப்பு செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் ட்ரோன் களை வெளிநாடுகளில் இருந்து வாங்குவதை இந்தியா குறைத்து வருகிறது. அவற்றின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

மேலும், பாதுகாப்பு காரணங்களால் இந்தியாவுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டாம் என உள்நாட்டில் ட்ரோன்களைத் தயாரிக்கும் நிறுவனங்களிடம் மத்திய அரசு கடந்த பிப்ரவரி, மார்ச் மாதங்களில் தெரிவித்துள்ளது. அந்நிறுவனங்க ளுடனான ஒப்பந்தத்திலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், சீன உதிரி பாகங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையால், ட்ரோன்களின் உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். மற்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உதிரிபாகங்கள் அதிக செலவு கொண்டதாக உள்ளன. அதனால், மத்திய அரசு ஒதுக்கியுள்ள நிதிக்குள் ட்ரோன் களை உற்பத்தி செய்வது சவால்மிக்கது என்றும் அவர்கள் தெரிவிக் கின்றனர். உள்நாட்டில் அதிநவீன கருவிகளை உருவாக்குவதற் கான தொழில்நுட்ப வசதிகளும் காணப்படவில்லை என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஆராய்ச்சி நடவடிக்கைகளில் தனியார் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டு கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய விமானப்படையில் அக்னி வீரர்களாக சேர ஆகஸ்ட் 17ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்

புது தில்லி, ஆக.9

இந்திய விமானப்படையில் அக்னி வீரர்களாக சேர ஆகஸ்ட் 17ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து விரிவான செய்தியாவது: ராணுவம், கடற்படை, விமானப்படையில் ஒப்பந்த அடிப்படையில் 4 ஆண்டுகள் பணியாற்றும் அக்னி பாதை திட்டம், கடந்த 2022ம் ஆண்டு ஜூன் 16ம் தேதி அறிவிக்கப்பட்டது. நாடு முழுவதும் அக்னிபாத் திட்டத்தின் கீழ் ராணுவத்திற்கு ஆள் சேர்ப்பு நடைபெற்று வருகிறது. அதே போல தற்போது விமானப் படைக்கும் ஆள்சேர்ப்பு நடைபெற்று வருகிறது. அதன்படி, இந்திய விமானப்படையில் அக்னி வீரர்களாக சேர ஆகஸ்ட் 17ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக் கப்பட்டுள்ளது. ஜூன் 27, 2003 டிசம்பர் 27, 2006க்கு இடையே பிறந்த திருமணமாகாத ஆண், பெண் விண்ணப்பிக்கலாம்.

குறைந்தபட்சம் 50 சத மதிப்பெண்களுடன் கணிதம், இயற்பியல் மற்றும் ஆங்கிலம் பாடத்துடன் 12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல், எலக்ட்ரா னிக்ஸ், ஆட்டோமொபைல், கம்ப்யூட்டர்சயின்ஸ், இன்ஸ்ட்ரூ மென்டேன் டெக்னாலஜி, இன்ஃபர்மேசன் டெக்னாலஜி ஆகிய ஏதாவது ஒரு டிப்ளமோ படிப்பில் 50 சத மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஜூலை 27ம் தேதி தொடங்கிய விண்ணப்பப் பதிவு ஆகஸ்ட் 17ம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. https://agnipathvayu.cdac.in என்ற இணையதளத்தில் கூடுதல் தகவல்களை தெரிந்து கொள்ளலாம்.



# திண்டிவனம் பார்மா பார்க்கில் தொழில் துவங்க 46 மனைகளுக்கு, 60 நிறுவனங்கள் விண்ணப்பம்

சென்னை, ஆக.9

திண்டிவனம் பார்மா பார்க்கில் தொழில் துவங்க 46 மனை களுக்கு, 60 நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் பகுதியில் 111 ஏக்கர் பரப்பளவில், ரூ.155 கோடி மதிப்பில், மத்திய, மாநில நிதி பங்களிப்புடன், பார்மா பார்க் எனும் மருந்து பூங்கா அமைக்கப்பட உள்ளது. மொத்தம் 46 சிறு, குறு, நடுத்தர மருந்து தொழில் நிறுவனங்கள், பார்மா பார்க்கில் மருந்து, உற்பத்தி சாதனங்கள் தயாரிப்பு பணிகளில் ஈடுபட உள் ளன. அதன்படி, ஒரு நிறுவனத்திற்கு 1 முதல் 3 ஏக்கர் வரை நிலம் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. அதில், 1 ஏக்கர் ரூ.1.05 கோடிக்கு விற்பனையாகிறது. இதற்கு விண்ணப்பிப்பது 4ம் தேதியுடன் முடி வடைந்த நிலையில், 46 மனைகளுக்கு மொத்தம் 60 நிறுவனங் கள் விண்ணப்பித்துள்ளன. இதில், நிறுவனங்களில் தகுதி அடிப் படையில் மனைகளை ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் ஒரு வாரத்தில் முடிக்கப்பட்டு, தகுதியான நிறுவனங்கள் அறிவிக்கப்படும் என, தமிழக அரசு தெரிவித்துள்ளது.



# சதுரகிரியில் ஆடி அமாவாசை திருவிழா பக்தர்கள் மலை மீது தங்குவதற்கு அனுமதியில்லை

மதுரை, ஆக.9

மதுரை மாவட்டம், பேரையூர்வட்டம், அத்திபட்டி உள்வட்டம், சாப்டூர் கிராமம் சதுரகிரிமலை அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமி திருக்கோவிலில் ஆடி அமாவாசை திருவிழா வருகிற 16.08.2023-அன்று நடைபெறவுள்ளது. பக்தர்களின் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு 12.08.2023 முதல் 17.08.2023 வரை கோவிலுக்கு பக்தர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். மேற்கண்ட தினங்களில் அதிகாலை 5.30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை பக்தர்கள் மலையேற அனுமதிக்கப்படுவார்கள். எனவே, கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, பக்தர்கள் 12.08.2023 முதல் 17.08.2023 வரை பரவலாக வருமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள். பக்தர்கள் மலைமீது தங்குவதற்கு அனுமதியில்லை.

பக்தர்களின் நலனுக்காக போக்குவரத்துத்துறையினரால், ராஜ பாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, டி.கல்லுப்பட்டி மற்றும் மதுரை ஆகிய நகரங்களிலிருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்படவுள்ளது. திருக்கோவில் வளாகத்தில் ஜெனரேட்டர் மூலம் தேவையான அளவு மின் விளக்குகள்மற்றும் சோலார் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு பொதுமக்கள் வெள்ளைப்பாறை வழியாக அருள்மிகு சுந்தரமூர்த்தி சன்னதி சென்று அருள்மிகு சுந்தரமகாலிங்க சுவாமியை தரிசனம் செய்து விட்டு, சன்னதிக்கு எதிரே உள்ள புதிய பாதை வழியாக வெளியே வந்து அருள்மிகு சந்தனமகாலிங்க சுவாமியை தரிசனம் செய்துவிட்டு, இரும்பு பாலத்தின் வலது புறமாக கீழே இறங்குமாறு ஒரு வழிப்பாதை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தனியார் வாகனங்களில் வரும் பொதுமக்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் வாகனங்களை நிறுத்திச் செல்ல வேண்டும். பொது மக்களின் வசதிக்காக பெண்கள் மற்றும் ஆண்களுக்கு தனித்தனியே கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளது. மலையடிவாரம், மலைக்குச் செல்லும் மலைப்பாதை மற்றும் திருக்கோவில் வளாகம் ஆகியவற்றில் மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

வயதான மற்றும் கடுமையான நோய் உள்ளவர்கள் மலை மீது ஏறுவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், திருவிழாவில் கலந்து கொள்ள வருகை தரும் பக்தர்கள் கோவிலில் சுற்றுப்புறத்தை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் வைக்குமாறு மாவட்ட ஆட்சியர் மா.செள.சங்கீதா தெரிவித்துள்ளார்.

# குறைந்த விலையில் புதிய எலெக்ட்ரிக் ஸ்கூட்டர்

## ஓலா அறிமுகம் செய்கிறது

பெங்களூரு, ஆக.9

ஒலா எலெக்ட்ரிக் நிறுவனம் தனது வாகனங்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. புதிய எலெக்ட்ரிக் ஸ்கூட்டர் மாடலுக்கான டீசரை அந்நிறுவனம் வெளியிட்டு உள்ளது.

சமீபத்தில் ஒலா நிறுவனம் தனது எஸ் 1 வேரியன்டை நிறுத்திய நிலையில், புதிய ஸ்கூட்டருக்கான டீசரை வெளியிட்டு இருக்கிறது. டீசரின் படி புதிய ஒலா ஸ்கூட்டர் சற்று வித்தியாசமான ஹேண்டில்பார் மற்றும் ஸ்விட்ச் கியூப்களை கொண்டிருக்கும் என்று தெரியவந்துள்ளது. இத்துடன் வட்ட வடிவம் கொண்ட கண்ணாடிகள், புதிய ஹெட்லைட் கவுல் வழங்கப்படுகிறது.

புதிய ஸ்கூட்டரில் காஸ்மடிக் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவைதவிர புதிய ஸ்கூட்டரின் ஒட்டுமொத்த டிசைன் ஒரே மாதிரியே இருக்கும் என்று தெரிகிறது. புதிய ஒலா ஸ்கூட்டரின் ஹார்டுவேர் அம்சங்கள் பற்றி இதுவரை எந்த தகவலும் இல்லை. எனினும், புதிய ஸ்கூட்டர் ஒலா எஸ்1 ஏர் மாடலின் கீழ் நிலைநிறுத்தப்படும் என்பதால், அதன் அம்சங்கள் மற்றும் ரேன்ஜ் சற்று குறைவாகவே இருக்கும் என்று தெரிகிறது. தற்போது விற்பனை செய்யப்படும் ஒலா எஸ்1 ஏர் மாடலில் 3 கிலோவாட் ஹவர் பேட்டரி மற்றும் 4.5 கிலோவாட் மோட்டார் வழங்கப்பட்டு இருக்கிறது.

இதில் உள்ள பேட்டரியை முழுமையாக சார்ஜ் செய்தால் 125 கிலோமீட்டர்கள் வரையிலான ரேன்ஜ் வழங்குகிறது. இத்துடன் மணிக்கு அதிகபட்சம் 90 கிலோமீட்டர் வேகத்தில் செல்லும் திறன் கொண்டுள்ளது. புதிய ஒலா எஸ்1 மாடலில் எல்இடி இலுமினேசன், டிஜிட்டல் கன்சோல், இரண்டு ரைடு மோட்கள் வழங்கப்படுகிறது. இத்துடன் முன்புறத்தில் டெலிஸ்கோபிக் ஃபோர்க்குகள், பின்புறம் இரட்டை ாக் அப்சார்பர்கள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். இத்துடன் இருபுறங்களிலும் டிரம் பிரேக்குகள் வழங்கப்படலாம். இந்திய சந்தையில் புதிய ஒலா ஸ்கூட்டர் ஆகஸ்ட் 15ம் தேதி அறிமுகம் செய்யப்பட இருக்கிறது. இதன் விலை ஏற்கனவே விற்பனை செய்யப்பட்டு வரும் ஒலா எஸ்1 ஏர் மாடலை விட குறைவாகவே நிர்ணயம் செய்யப்படும் என்று தெரிகிறது. இந்தியாவில் ஒலா எஸ்1 ஏர் மாடல் விலை ரூ.1 லட்சத்து 09 ஆயிரத்து 999 என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

# அதிவேக சார்ஜிங் திறன் கொண்ட ஸ்மார்ட்போன் விரைவில் அறிமுகம் செய்ய ரியல்மி திட்டம்

புது தில்லி, ஆக.9

ரியல்மி நிறுவனம் முற்றிலும் புதிய ஸ்மார்ட்போன் மாடலை அறிமுகம் செய்வதற்கான பணிகளில் ஈடுபட்டு வருவதாக செய்திகள் வெளியாகி உள்ளது.



புதிய ஸ்மார்ட்போன் 5200 எம்ஏஹெச் பேட்டரி மற்றும் 150 வாட் சார்ஜிங் தொழில்நுட்பம் கொண்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ரியல்மி ஜிடி 3 ஸ்மார்ட்போன் அதிகபட்சம் 240 வாட் சார்ஜிங் திறன் கொண்டிருக்கிறது. இந்த மாடலில் 4600 எம்ஏஹெச் பேட்டரி வழங்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. புதிய ஸ்மார்ட்போன் குறித்து டிப்ஸ்டரான டிஜிட்டல் சாட் ஸ்டேசன் வெளியிட்டு இருக்கும் தகவல்களில், ரியல்மி நிறுவனம் உருவாக்கி வரும் புதிய ஸ்மார்ட்போன் 150 வாட் சார்ஜிங் வசதி மற்றும் 5200 எம்ஏஎச் பேட்டரி வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இத்துடன் இதே ஸ்மார்ட்போனின் 240 வாட் சார்ஜிங் வசதி கொண்ட வேரியண்ட் அறிமுகம் செய்யப்படும் என்றும் இதில் 4600 எம்ஏஹெச் பேட்டரி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஸ்மார்ட்போன் ரியல்மி ஜிடி 5 என்ற பெயரில் விற்பனைக்கு அறிமுகம் செய்யப்படும் என்று தெரிகிறது. இந்த ஸ்மார்ட்போனில் அல்ட்ரா ஃபாஸ்ட் சார்ஜிங் சொல்யுசன் எனும் தொழில்நுட்பம் வழங்கப்படுவதாக தெரிகிறது. எனினும், இந்த ஸ்மர்ட்போனில் மிக குறைந்த திறன் கொண்ட பேட்டரி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த ஸ்மார்ட்போன் எந்த பெயரில் அறிமுகம் செய்யப்படும் என்பது குறித்து இதுவரை எந்த தகவலும் இல்லை. முன்னதாக ரியல்மி நிறுவனம் தனது ரியல்மி ஜிடி நியோ 5 ஸ்மார்ட்போனினை சீன சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த ஸ்மார்ட்போனில் 240 வாட் பாஸ்ட் சார்ஜிங் வசதி, 4600 எம்ஏஹெச் பேட்டரி வழங்கப்படுகிறது. இத்துடன் ரியல்மி ஜிடி நியோ 5 மாடலின் 150 வாட் சார்ஜிங் வசதி மற்றும் 5000 எம்ஏஹெச் பேட்டரி கொண்ட வேரியண்ட் அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது. இந்த ஸ்மார்ட்போன் சர்வதேச சந்தையில் ரியல்மி ஜிடி 3 என்ற பெயரில் அறிமுகம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# வாட்ஸ்அப் செயலியில் புதிய அம்சம் அறிமுகம்

மும்பை, ஆக.9

வாட்ஸ்அப் செயலியில் வீடியோ கால் பேசும் போது, உங்களது சாதனத்தின் ஸ்கிரீனை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளும் வசதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த அம்சத்தினை மெட்டா நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி மார்க் ஜுக்கர்பர்க் அதிகாரப்பூர்வமாக அறிவித்து இருக்கிறார்.

அதன்படி பயனர்கள் வீடியோ கால் பேசும் போது ஷேர் ஐகானை க்ளிக் செய்து குறிப்பிட்ட செயலியோ அல்லது சாதனத்தின் முழு ஸ்கிரீனையோ ஷேர் செய்து கொள்ளலாம். ரே் செய்ய துவங்கியதும், உங்களது ஸ்கிரீனில் இடம்பெற்று இருக்கும் தகவல்கள் அனைத்தும் பகிரப்பட்டு, ஷேர் செய்வோருடன் பகிரப்படும். இதனை எப்போது வேண்டுமானாலும் நிறுத்திக் கொள்வதற்கான வசதியும் வழங்கப்படுகிறது.

ஸ்மார்ட்போன்களில் சிறப்பான வியூவிங் மற்றும் ஷேரிங் அனுபவத்தை பெறுவதற்கு வீடியோ கால் பேசும் போது மொபைலை லேண்ட்-ஸ்கேப் மோடில் வைத்துக் கொள்வது நல்லது. 2016-ம் ஆண்டு வாட்ஸ்அப் செயலியில் வீடியோ கால் செய்வதற்கான வசதி வழங்கப்பட்ட நிலையில், தற்போது தான் ஸ்கிரீன் ஷேரிங் வசதி வழங்கப்பட்டு இருக்கிறது.

முன்னதாக மே மாத வாக்கில் ஆண்ட்ராய்டு பீட்டா வெர்சனில் ஸ்கிரீன் ஷேரிங் அம்சத்திற்கான டெஸ்டிங் செய்ய துவங்கியது. விண்டோஸ் பீட்டா வெர்ஷனில் இந்த அம்சத்திற்கான டெஸ்டிங் ஜுன் மாத வாக்கில் துவங்கியது. தற்போது வாட்ஸ்அப் செயலியின் ஸ்டேபில் வெர்சனில் இந்த அம்சம் அனைவருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.



# ரூ.73,287 கோடி பாக்கி தொகை மீட்பது கடினம்: செபி

புது தில்லி, ஆக.9

பங்குச்சந்தை கட்டுப்பாட்டு அமைப்பான செபி, அதற்கு வரவேண்டிய பாக்கி தொகையான ரூ.73,287 கோடியை மீட்பது கடினம் என்று தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. முதலீட்டாளர்களுக்கு நிறுவனங்கள் திருப்பி வழங்க வேண்டிய தொகை, நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய அபராத தொகை என மொத்தம் ரூ.1.02 லட்சம் கோடி நிலுவையில் இருப்பதாக செபி தெரிவித்துள்ளது.

மொத்த பாக்கித் தொகையில், 62 சதம் அதாவது, ரூ.63,206 கோடி, பிஏசிஎல் மற்றும் சஹாரா ஆகிய நிறுவனங்களிடமிருந்து வரவேண்டியதாகும். மேலும் ரூ.70,483 கோடி பாக்கி தொகை சம்பந்தமாக பல்வேறு நிறுவனங்களின் மீதான 77 வழக்குகள், நீதிமன்றங்களில் நிலுவையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் 31, 2023 நிலவரப்படி, பாக்கி தொகையான ரூ.73,287 கோடியை மீட்பது கடினம் என்று செபியால் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், மீட்பதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் தொடர்ந்து மேற்கொள்வர் என்று செபி தெரிவித்துள்ளது.



# கிரெட்டா 14,062 யூனிட்கள் விற்பனை புதிய மைல்கல்லை எட்டி சாதனை

சென்னை, ஆக.9

ஹுண்டாய் நிறுவனத்தின் காம்பேக்ட் எஸ்யூவி காரான கிரெட்டா மாடல், 14,062 யூனிட்கள் விற்பனையாகி புதிய மைல்கல்லை எட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது:



இந்தியாவில் அதிக அளவில் எஸ்யூவி கார்கள் விற்பனையாகி வருகிறது. தற்போதைய சூழலில் பெரும்பாலான மக்களும் சிறிய கார்களை விட எஸ்யூவி கார்களை தான் தேடி தேடி வாங்கு கின்ற னர். அந்தவகையில் இந்திய சந்தையில் காம்பேக்ட் ரக எஸ்யூவி கார்களின் வருகை அதிகரித்து வருகிறது. இந்த வரிசையில் அதிக விற்பனையாகும் காம்பேக்ட் ரக எஸ்யூவி கார்கள் பட்டியலில் ஹுண்டாய் கிரெட்டா முதலிடத்தில் உள்ளது. ஹுண்டாய் கிரெட்டா வில் கவர்ச்சிகரமான ஸ்பெஷல் எடிஷன்களும் வரத் தொடங்கியதால் வாடிக்கையாளர்களிடம் மிகப்பெரிய வரவேற்பை பெற்று வருகிறது.

அதன்படி, கடந்த 2022ம் ஆண்டு ஜூலை மாதத்தில் 12,625 கிரெட்டா கார்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு இருந்த நிலை யில், நடப்பாண்டு (2023) ஜூலை மாதத்தில் மொத்தம் 14,062 கிரெட்டா கார்கள் விற்பனை செய்யப்பட்டு உள்ளன. அந்த வகையில், கிரெட்டா கார்களின் விற்பனை ஆனது 11.38% வளர்ச்சி யடைந்துள்ளது. இருப்பினும், 2023 ஜூலை மாதத்தை விட ஜூன் மாதத்தில் கிரெட்டா மாடலில் 14,447 யூனிட்களை ஹுண்டாய் நிறு வனம் விற்பனை செய்திருந்தது. அப்படிபார்த்தால், கிரெட்டா கார் களின் போன மாதத்தை விட விற்பனை 2.66% குறைந்துள்ளது.

அதேசமயம் கிரெட்டாவின் ஃபேஸ்லிஃப்ட் காரை அறிமுகம் செய்யும் பணிகளில் ஹுண்டாய் நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. டெஸ்டிங்கில் இருக்கும் கிரெட்டா ஃபேஸ்லிஃப்ட் கார் அடுத்த 2024 ஜனவரி மாதத்தில் சந்தையில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் விற்பனை அதிகரிக்கும் எனவும் கூறப்படுகிறது. ஏற்கனவே சந்தையில், கிரெட்டாவுக்கு போட்டியாக, கியா செல்டோஸ், மாருதி சுஸுகியின் கிராண்ட் விட்டாரா, டொயோட்டா ஹைரைடர், ஸ்கோடா குஷாக், உள்ளிட்ட கார்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

# விருதுநகரில் ஆக.11ல் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் : ஆட்சியர் தகவல்



விருதுநகர், ஆக.9

விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக இந்த மாதத்தின் இரண்டாம் வெள்ளிக் கிழமையில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படவுள்ளது. அதன்படி படித்த வேலை தேடும் மனுதாரர்களுக்காக 11.08.2023 அன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி முதல் 02.00 மணி வரை தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இத்தனியார் வேலைவாய்ப்பு முகாமில் Adayar Anandha Bhawan, Chennai G.R Inspection> CIEL மற்றும் Devendran Plastic போன்ற முன்னனி நிறுவனங்களில் வேலைக்கான ஆட்களை தேர்வு செய்யவுள்ளனர். மேலும் 20க்கும் மேற்பட்ட பிரபல முன்னணி நிறுவனங்களும் கலந்து கொண்டு 8ஆம் வகுப்பு தேர்ச்சி முதல் பட்டப்படிப்பு மற்றும் ஐ.வு.ஐஃடிப்ளமோ ஆகிய கல்வித் தகுதி உடைய பணியாளர்களை தெரிவு செய்யவுள்ளார்கள்.

இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்த விரும்பும் வேலை நாடுநர்கள் 11.08.2023 அன்று வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்வதற்கு முன்பாக www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களது கல்வித்தகுதியை பதிவு செய்துவிட்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இம்முகாமில் கலந்து கொள்ள விரும்பும் தனியார் துறை நிறுவனங்கள் விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு நேரில் வருகை புரிந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தனியார் வேலைவாய்ப்பு முகாம் மூலம் பணிநியமனம் பெற்றவர்களது வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

# சுதந்திர தின விடுமுறையையொட்டி 1,100 சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டம்



சென்னை, ஆக.9

சுதந்திர தின விடுமுறை, வார விடுமுறையையொட்டி தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம் 1,100 சிறப்பு பேருந்து களை இயக்க திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளது. இது குறித்து விரிவான செய்தியாவது: தமிழகத்தில் சென்னை, கோவை, திருச்சி, திருப்பூர் போன்ற நகரங்களில் வேலை நிமித்த மாக சொந்த ஊர்களிலிருந்து வந்து தங்கியிருக்கின்றனர்.

இவர்கள், தொடர் விடுமுறை நாள்களில் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்வார்கள். இது போன்ற காலங்களில் பயணிகளின் தேவையை கருத்தில் கொண்டு தமிழக அரசு சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது. இந்நிலையில், சுதந்திரதின விழா வரும் 15ம் தேதி செவ்வாய்க்கிழமை வருகிறது. சனி, ஞாயிறு வாரவிடுமுறையை சேர்த்து சில நிறுவனங்களில் ஊழியர்களுக்கு திங்கள்கிழமையும் விடுமுறை அளிக்கப்பட் டுள்ளது. நான்கு நாள்கள் விடுமுறை என்பதால் மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்று திரும்ப உள்ளனர்.

இதனால் சென்னை, மதுரை, நெல்லை, திருச்சி, சேலம், கோவை போன்ற இடங்களில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பெங்களூரில் இருந்து பிற இடங்களுக்கும் அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் பேருந்துகள் இயக்கப் படுகின்றன. ஆகஸ்ட் 11, 12, 13, 15 ஆகிய நாள்களில் மொத்தம் 1,100 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாகவும், இதனால் மக்கள் கூட்ட நெரிசலின்றி பயணிக்க முன்கூட்டியே முன்பதிவு செய்யவும் போக்குவரத்துக்கழகம் அறிவுறுத்தியுள்ளது.

# ஸ்டீல் பிரேஸ் டயர் எம்ஆர்எஃப் அறிமுகம்

சென்னை, ஆக.9

ஸ்டீல் பிரேஸ்' டயரை எம்ஆர்எஃப் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. சென்னையைச் சேர்ந்த எம்ஆர்எஃப் நிறுவனம் இது குறித்து வெளியிட்ட செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உயர் செயல்திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஸ்டீல்பிரேஸ் டயரை அறிமுகப்படுத்தி உள்ளோம். விரிவான சோதனைகளின் அடிப்படையில் ஆர் & டி குழு கடுமையான உழைப்புக்குப் பிறகு புதிய தொழில்நுட்பத்தின் மூலம் இந்த டயரை உருவாக்கியுள்ளது.

கூடுதலான கிரிப், விரைவான அதிர்வுகளை தாங்கும் திறன், ஸ்விஃப்ட் ஸ்டீயரிங் ரெஸ்பான்ஸ், நிலைத்தன்மை உள்ளிட்ட கூடுதல் அம்சங்கள் இப்புதிய டயரில் இடம் பெற்றுள்ளன. அதிவேக பந்தயத்துக்கு ஏற்ப, கார்னரிங் செய்வதற்கு உகந்த வகையில் இந்த டயர் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு எம்ஆர்எஃப் நிறுவனம் தெரிவித்துள்ளது.



# இணையவழி விளையாட்டுகள் மீதானவரி மூலம் அதிக வருவாய் கிடைக்கும்: நிதியமைச்சர் தகவல்



புது தில்லி, ஆக.9

இணையவழி விளையாட்டுகள், சூதாட்ட விடுதிகள் (கேசினோ), குதிரைப் பந்தயம் உள்ளிட்டவற்றில் கட்டப்படும் முழு பந்தய தொகை மீது 28 சத ஜிஎஸ்டி விதிக்கப்படுவதன் மூலம் அரசின் வரி வருவாய் வெகுவாக அதிகரிக்கும் என்று மாநிலங்களவையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது குறித்து கேள்விக்கு நிதியமைச்சர் எழுத்து மூலம் அளித்த பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் இப்போது சூதாட்ட விடுதிகளின் மொத்த வருவாயில் 28 சதம் ஜிஎஸ்டி விதிக்கப்படுகிறது. குதிரைப் பந்தயத்தின் நுழைவுக் கட்டணம் மீது 18 சதம் ஜிஎஸ்டி உள்ளது. ஜிஎஸ்டி கவுன்சில் பரிந்துரையின்படி இணையவழி விளையாட்டு, சூதாட்ட விடுதிகள், குதிரைப் பந்தயம் ஆகியவற்றில் கட்டப்படும் மொத்த பந்தய தொகை மீது ஜிஎஸ்டி விதிக்கப்படும்போது அப்பிரிவில் இருந்து அரசுக்குக் கிடைக்கும் வரி வருவாய் வெகுவாக அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இணைய வழி விளையாட்டுகள், சூதாட்ட விடுதிகள் மீதான இந்த 28 சத ஜிஎஸ்டி அக்டோபர் 1ம் தேதி முதல் நடைமுறைக்கு வர இருக்கிறது.




# இந்தியாவில் அறிமுகமானது 2023 பென்ஸ் ஜிஎல்சி



புது தில்லி, ஆக.9

மெர்சிடிஸ் பென்ஸ் இந்தியா நிறுவனம் தனது புதிய ஜிஎல்சி மாடலுக்கான முன்பதிவை கடந்த மாதம் துவங்கியது. முன்பதிவு கட்டணம் ரூ. 1.5 லட்சம் ஆகும். தற்போது, புதிய மெர்சிடிஸ் பென்ஸ் ஜிஎல்சி மாடல் விலை ரூ. 73.5 லட்சம், எக்ஸ்-ஷோரூம் என்று நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

டிசைன் மற்றும் ஸ்டைலிங்கை பொருத்தவரை 2023 மெர்சிடிஸ் பென்ஸ் ஜிஎல்சி மாடலில் தற்போதைய மாடலில் இருப்பதை விட வித்தியாசமான காஸ்மடிக் மாற்றங்களை கொண்டிருக்கிறது. இதன் முன்புறம் அளவில் பெரிய கிரில், பாரம்பரியம் மிக்க பென்ஸ் லோகோ, கிடைமட்டமாக பொருத்தப்பட்ட எல்இடி டிஆர்எல்-கள், புதிய எல்இடி ஹெட்லேம்ப்கள் வழங்கப்படுகின்றன.

இந்த காரின் நீளம் 60 மில்லிமீட்டர் வரை நீட்டிக்கப்பட்டு தற்போது 4716 மில்லிமீட்டராக உள்ளது. இதன் மூலம் காரின் வீல்பேஸ் 15 மில்லிமீட்டர் வரை உயர்த்தப்பட்டு தற்போது 2888 மில்லிமீட்டராக இருக்கிறது.

காரின் பின்புறத்தில் பம்ப்பர் சற்று கூர்மையாக்கப்பட்டு இருக்கிறது. இத்துடன் புதிய எல்இடி ஹெட்லேம்ப்கள், பவர்டு டெயில்கேட் வழங்கப்படுகிறது. புதிய மெர்சிடிஸ் பென்ஸ் GLC மாடல் இருவித பவர்டிரெயின் ஆப்ஷன்களில் கிடைக்கிறது. இதில் 2.0 லிட்டர் பெட்ரோல் மற்றும் 2.0 லிட்டர் டீசல் என்ஜின்கள் அடங்கும். இத்துடன் மைல்டு ஹைப்ரிட் மோட்டார் வழங்கப்படுகிறது. இத்துடன் 9 ஸ்பீடு ஆட்டோமேடிக் கியர்பாக்ஸ் மற்றும் 4மேடிக் சிஸ்டம் வழங்கப்படுகிறது.

# பிசிசிஐ 2021-22 நிதியாண்டில் ரூ.1,159 கோடி வருமான வரி செலுத்தியுள்ளது: அமைச்சர்

மும்பை, ஆக.9

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) 2021-22 நிதியாண்டில் ரூ.1,159 கோடி வருமான வரி செலுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது இது 37 சதம் அதிகமாகும். மக்களவையில் இது குறித்து கேள்விக்கு நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌதரி எழுத்து மூலம் அளித்த பதிலில் தெரிவித்திருப்பதாவது: பிசிசிஐ 2021-22 நிதியாண்டில் ரூ.1,159 கோடியை வருமான வரியாக செலுத்தியுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 37 சதம் அதிக மாகும். 2021-22ல் பிசிசிஐ ரூ.7,606 கோடி வருவாய் ஈட்டியுள் ளது. செலவுகள் ரூ.3,064 கோடியாக இருந்துள்ளது. இதுவே அதற்கு முந்தைய ஆண்டு வரவுகள் ரூ.4,735 கோடியாகவும், செலவுகள் ரூ.3,080 கோடியாகவும் இருந்துள்ளன. 2020-21ல் ரூ.844.92 கோடி, 2019-20-இல் ரூ.882.29 கோடி, 2018-19ல் ரூ.815.08 கோடி, 2017-18-இல் ரூ.596.63 கோடியை பிசிசிஐ வருமான வரியாக செலுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

